கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) அரக்கோணத்தில் தனியார் துறையில் ஒரு ball bearing உற்பத்திசாலை நிறுவ 1961-ம் வருடத்தில் லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் இத் தொழிற்சாலைக்குத் தக்க அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவி கிடைக்காத காரணத்தால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, அயல் நாட்டிலிருந்து அதற்கு வேண்டிய உதவிகள் சரியாகக் கிடைக்கவில்லை என்பதினால் இந்தத் தொழிற்சாலை நிறுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேறு எந்தக் கம்பெனியாவது உதவி அளிக்க முன்வந்தால் பால் பேரிங் தொழிற்சாலை நிறுவுவதற்குச் சர்க்கார் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. லைசென்ஸிங் கமிட்டிக்கு அப்ளிகேஷன் போட்டால், அதை மத்திய சர்க்கார் லைசென்ஸிங் கமிட்டி பரிசீலனை செய்வார்கள்.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, வட ஆற்காடு ஜில்லாவைப்போன்ற தொழில் நிலையில் மிகவும் பிற்போக்காக உள்ள ஜில்லாவில் சர்க்கார் முன்வந்து, அதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் கிடைக்கச் செய்து தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதற்கு உதவி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சர்க்கார் துறையிலே நிறுவுகிற தொழிற்சாலை அல்ல. தனியார் துறையில் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அவர்கள் என்ன உதவி கோரி இருந்தாலும் சர்க்காரிலிருந்து அதற்கு உதவி செய்திருக்கிறோம். அவர்கள் 'ஃபாரின் கொலாபரேஷன்' கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக விட்டு விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. பி. பழனிசாமி : கோவையிலிருந்து தனியார் துறையில் ஒரு பால்பேரிங் கம்பெனிக்கு சாங்ஷன் கேட்டிருந்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

இரும்புத் தாது

*** 71 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராசிபுரம் வட்டம் சிங்கிலியன் கோம்பை என்னும் கிராமத்தில் இரும்புத் தாது கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

9th August 1963]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes Sir.

(b) The Geological Survey of India has estimated that the iron ore occurring in the Singilian Kombai region of Rasipuram taluk constitutes a deposit capable of yielding six and a half million tons only. The area is far removed from the Railway line or road. The cost of working this deposit would therefore be high. Besides this, the extent of the deposit is small. Hence this deposit has not so far been exploited.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : போக்குவரத்து வசதி இல்லாததினால் இத் திட்டம் கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அங்கே ரெயில்வே லைன் போட்டாவது இந்தத் திட்டத்தை அமுல் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கட்டுப்படியாகாது என்று சர்க்கார் நினைக்கிறார்கள். அதிலிருக்கிற கனிப்பொருள் சத்து 30 அல்லது 35 சதவிகிதம் தான் இருக்கிறது. இருக்கின்ற 65 லட்சம் டன் ரொம்பக் குறைவு. அது போதாது.

பஞ்சாலை

* 72 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலுக்கா, பாமணி கிராமத்தில் பஞ்சாலை ஒன்று துவக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமென்றால், அது எப்போது துவக்கப்படும் ?

(உ) அது தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுமா, அல்லது கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) & (உ): வினாக்களிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : பஞ்சாலை ஒன்று மன்னார்குடி தாலூகாவில் பாமனியில் அமைக்கப் போவதாக முக்கிய நபர்கள் மூலம் பலமான வதந்திகள் வருகின்றன. அப்படி இல்லை என்று சொன்னால், சர்க்கார் இந்த வதந்தியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வதந்திகளுக்கு ஆதாரம் இல்லை. வதந்திகளைத் தடுப்பது சர்க்காரால் முடியாத காரியம்.

Village Officers (T.A.)

* 73 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the items of T.A. to Village Officers mentioned in the speech of the Hon. Minister for district Administration include also the T.A. paid to Village Officers for attending the Jamabandhi in the taluk offices; and